பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**11 11 2025** **TUESDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** தில்லி கார் குண்டுவெடிப்பு சம்பவம் குறித்த விசாரணை தேசிய புலனாய்வு அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**2)** தேர்தல் ஆணையத்தின் கண்ணியத்தை குலைக்கும் வகையில் திமுக மற்றும் காங்கிரஸ் செயல்படுவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் குற்றம் சாட்டியுள்ளார்.

**3)** வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளுக்கு எதிராக திமுக தாக்கல் செய்த மனு தொடர்பாக பதிலளிக்குமாறு உச்சநீதிமன்றம், தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

**4)** திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த **24** மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**5)** உலக துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Aishwary Pratap Singh Tomar** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

தில்லி கார் குண்டுவெடிப்பு சம்பவம் குறித்த விசாரணை தேசிய புலனாய்வு அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இன்று புதுதில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் நடைபெற்ற உயர்நிலை ஆய்வு குழுக்கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, இந்த சம்பவம் குறித்த விசாரணையை தேசிய புலனாய்வு அமைப்பு தொடங்கியுள்ளது.

<<<<<<>>>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை மேற்கொள்வதற்கான முழு உரிமையும் சட்ட ரீதியாக தேர்தல் ஆணையத்திற்கு உள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னரே பத்து முறை இதுபோன்ற சிறப்பு திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

***(Sound Byte — நிர்மலா (1)—48 Sec. )***

நிர்வாக தோல்வியை மறைப்பதற்காகவும், மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காகவும் திமுக தேர்தல் ஆணையத்தின்

பணிகளுக்கு எதிராக போராட்டம் நடத்துவதாக திருமதி நிர்மலா சீதாராமன் குற்றம் சாட்டினார்.

***(Sound Byte — நிர்மலா (2) - 40 Sec. )***

இதற்கிடையே, வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணிகளை கண்டித்து திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் சார்பில் இன்று மாநிலம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

<<<<<<>>>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளுக்கு எதிராக திமுக தாக்கல் செய்த மனு தொடர்பாக இரண்டு வாரங்களுக்குள் பதிலளிக்குமாறு தேர்தல் ஆணையத்திற்கு, உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இம்மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு **Surya Kant**, திரு **Joymalya Bagchi** அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

தமிழகம் மற்றும் மேற்குவங்கத்தில் இப்பணிகளை மேற்கொள்ளக்கூடாது என்று வலியுறுத்தி திமுக, காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் சார்பில் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சென்னை மற்றும் கொல்கத்தா உயர்நீதிமன்றங்கள் இப்பிரச்சினை தொடர்பான வழக்கு விசாரணை மேற்கொள்ளக்கூடாது என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

அரசியல் கட்சிகளின் பொதுக்கூட்டங்கள் மற்றும் **Road Show**-க்களுக்கான வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை சமர்ப்பிக்க தமிழக அரசுக்கு மேலும் **10** நாட்கள் கால அவகாசம் வழங்கி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுக்கள் மீதான விசாரணை தலைமை நீதிபதி திரு எம் எம் ஸ்ரீவத்சவா, நீதிபதி திரு அருள்முருகன் அமர்வுமுன் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழக அரசு சார்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர், இப்பிரச்சினை குறித்து தொடர் ஆலோசனைகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

இதன் காரணமாக, இவற்றை வகுக்க ஒருமாத கால அவகாசம் வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதனை ஏற்க மறுத்த நீதிபதிகள் விசாரணையை வரும் **21**-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

<<<<<<>>>>>>

தேசிய நீர் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல், பத்து பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்படுவதாக கூறினார்.

சிறந்த மாநிலங்களுக்கான முதல் பரிசுக்கு மகாராஷ்ட்ராவும், இரண்டாவது பரிசுக்கு குஜராத்தும், மூன்றாவது பரிசுக்கு ஹரியானாவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சிறந்த மாவட்டங்கள், கிராம பஞ்சாயத்துகள் போன்றவற்றிற்கான விருதுகளும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தென் மண்டலத்தில் சிறந்த மாவட்டத்திற்கான முதல் பரிசு திருநெல்வேலிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பாலபுரம் கிராம பஞ்சாயத்து மூன்றாவது பரிசினை பெற்றுள்ளது.

இவ்விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் வரும் **18-**ஆம் தேதி நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் வழங்க உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>>

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே சிறுத்தை நடமாட்டத்தை கண்காணிக்க அதிநவீன கருவிகளை வனத்துறையினர் பயன்படுத்தி வருகின்றனர்.

கூண்டுவைத்து சிறுத்தையை பிடிப்பதற்கும் வனத்துறை நடவடிக்கை எடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — மூர்த்தி - 20 Sec. )***

<<<<<<>>>>>>

திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் - 45 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் புதுப்பிக்கப்பட்ட ஆவின் பாலகத்தின் விற்பனையை ஆட்சியர் திரு பிரதாப் இன்று தொடங்கிவைத்தார்.

------------

சென்னை தாம்பரம் விமானப்படை தளத்தில் டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ் முகாம் இன்று நடைபெற்றது. 800-க்கும் மேற்பட்ட ஓய்வூதியதார்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதார்கள் இதில் பங்கேற்றனர்.

-------------

வேலூரில் மழை நீர் சேகரிப்பு குறித்து மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு ஊர்வலம் இன்று நடைபெற்றது.

-----------------

சென்னை மாநகராட்சி சார்பில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

--------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சிறப்பாக பணிபுரிந்த காவல்துறையை சேர்ந்தவர்களை ஆணையர் திரு அருண் இன்று நேரில் அழைத்து பாராட்டு தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Aishwary Pratap Singh Tomar** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் **50** மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை **3** தங்கம், **4** வெள்ளி, **3** வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

---------------

சீன ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **11-6, 11-8, 11-3** என்ற செட் கணக்கில், எகிப்தின் **Menna Hamed**-ஐ வென்றார்.

**<<<<<<END>>>>>>**